(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) பள்ளி மாணவ மாணவிகள் பல ஊர்களில் கடத்தப்படுவதும், காவல் துறை குற்றவாளிகளைக் கைது செய்யத் தவறியதும் பெற்றோரிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42 ஆம் விதியின்கீழ் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்

'kidnapping school boys and girls in various centres in Madurai, Ramnad, Tirunelveli Districts by dubious persons ostensibly for human sacrifice and failure of police to apprehend the culprits and a great concern among parents'

—என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று அவசரப் பொது முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : துணைத் தலைவர் அவர்களே. இந்த விஷயம் நான் சமீபத்தில் மதுரைக்குப் போயிருந்தபோது தெரிந்தது. மதுரையிலே, செங்கோட்டையிலே இருந்து இம் மாதிரியாகக் கொண்டு வரப்பட்ட ஒரு பையனை போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் இறக்கிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவனைப் பற்றி உடனடியாக போலீசார் தகவல் சேகரித்து விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மதுரையில் பள்ளிக் குப் போன ஒரு பையனை முக்காடு போட்ட ஒரு பெண் கடத்திக் கொண்டு போனதாகவும், கடைசியில் அவனை சேலத்தில் கொண்டு போய்விட்டதாகவும் தெரிகிறது. இந்த மாதிரி செங்கோட்டை யிலிருந்து இன்னொரு பையனையும் கடத்திச் சென்றிருக்கிறார்கள். அந்த பையனை விசாரித்த விசாரணையிலிருந்து, அவனைக் கடத்திச் சென்றவர்கள் அந்தப் பையன் அவனுடைய தாய்க்கு எத்தனுவது குழந்தை என்று கேட்டதாகவும், இரண்டாவது, மூன்றாவது குழந்தை என்று சொன்னால் விட்டு விட்டுப் போய்விடுவதாகவும் தெரிகிறது. தலைமகனாய் இருந்தால் கடத்திக் கொண்டு போய் விடுகிறார்கள் போல் இருக்கிறது. ஆகவே, என்ன அச்சம் ஏற் படுகிறது என்றால், தென் ஜில்லாக்களில் ஏதாவது ஒரு கோஷ்டி நடமாடிக் கொண்டு பத்து வயதுக்குட்பட்ட பையன்களைத் தலை மகனாக இருந்தால் ஹ்யூமன் சாக்ரிபைசுக்காக கடத்திச் செல்ல

ஏற்பாடு செய்கிறார்களோ என்ற அச்சமும் பீதியும் இருக்கிறது. இதுபற்றி கம்ப்ளெயின்ட் கொடுத்தும் கூட இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. அரசின் கீழ் இருக்கும் போலீசார் அவ்வளவு அக்கறையாக இல்லையென்றே தெரிகிறது. இது தற்போது இரண்டு மூன்று ஜில்லாக்களில் மட்டும் இருக்கிறது. இது அதிகமாகப் பரவி விடாமல் இருப்பதற்கு இப்படி ஒரு கோஷ்டியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பது பற்றி எடுத்துக் கூற அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, சிறுவர்கள் கடத்தப்பட்டதாக நான்கு சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. செங்கோட்டை, பாளையங்கோட்டை, மதுரை — திருமங்கலம், மதுரை நகரம் என்ற நான்கு இடங்களில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டதாகத் தகவல் வந்தது.

இந்தச் சம்பவங்களில் காணாமல் போன சிறுவர்கள் வீடு திரும்பி விட்டார்கள். கண்டு பிடிக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை.

இந்த நான்கு சம்பவங்களில், பாளையங்கோட்டை, மதுரை—திருமங்கலம் ஆகிய இரண்டு சம்பவங்களில் காணாமல் போனவர்கள் தங்கள் இச்சையாகவே வெளியூர் சென்றார்கள். மீண்டும் வீடு திரும்பினார்கள். யாரும் கடத்தப்படவில்லை. அந்தச் சிறுவர்கள் மூலமாகவே தகவல்கள் வந்துள்ளன.

கடத்தப்பட்ட மற்ற இரண்டு சம்பவங்கள், செங்கோட்டை, மதுரை நகர் ஆகிய இடங்களில் நடைபெற்றவை ஆகும். அதிலே, மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியது போல், நவம்பர் 4-ம் தேதி காலை 10 மணி அளவில் செங்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் 13 வயதுச் சிறுவன் வகுப்பை விட்டு வெளியே வந்த நேரத்தில், வெள்ளைச் சட்டை அணிந்து கொண்டு கையில் பையுடன் நரைத்த தாடியுடன் இருந்த அந்நியர் ஒருவர் சிறுவனை அணுகி பேருந்து நிலையத்திற்கு வழி எது என்று கேட்டுக் கொண்டே தோளின் கை போட்டதாகவும், அதற்குப் பிறகு அவனுக்கு மயக்கம் ஏற்பட்டு

[டாக்டர் மு. கருணாநிதி] **[1975 நவம்பர் 11**

எதுவும் தெரியவில்லை என்றும், பிறகு ஒரு வாடகைக் காரில் மதுரையில் இருக்கும்போதுதான் நினைவு வந்ததாகவும், அப்போது தாடிக்கார ஆசாமி 'உன் பெற்றோருக்கு நீ எத்தனாவது பிள்ளை?' என்று கேட்க, அவன் 'இரண்டாவது பிள்ளை' என்று பதிலளித்ததும் மூன்று ரூபாயை அவன் கையில் கொடுத்துப் போய் விட்டான் என்று சொல்லப்படுகிறது.

அதற்குப் பிறகு அந்தச் சிறுவன் வாடகைக்கு ஆட்டோ ஒன்றை அமர்த்திக் கொண்டு மதுரை காவல் துறை கன்ட்ரோல் ரூமுக்குச் சென்று நடந்தவைகளைப் போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும், போலீஸ் அதிகாரிகள் செங்கோட்டையிலுள்ள அச்சிறுவனின் சகோதரருக்குத் தகவல் கொடுத்து, அவர் மதுரை வந்து சிறுவனை அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து செங்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று—குற்ற எண் 674/75—இ.பி.கோ. 363 வது பிரிவின்கீழ் 6—11—75 அன்று பதிவு செய்யப்பட்டு தீவிரமாகப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

அடுத்து, மதுரையில் கே. டி. கே. அவர்கள் எடுத்துக் காட்டியது போல் ஒரு சிறுவனை மஞ்சள் நிற ஆடை அணிந்த ஒரு பெண் அவனைப் பேருந்து ஒன்றில் அழைத்துச் சென்றதாகவும், அவனுக்குப் பிரயாணச் சீட்டும், சிற்றுண்டியும் வாங்கித் தந்ததாகவும், சேலத்தில் பஸ் போய் நின்ற பிறகு அந்தப் பெண் அந்தச் சிறுவனை அங்கேயே விட்டு விட்டுப் போய்விட்டாள் என்றும் தெரிகிறது. அந்தச் சிறுவன் அங்கே அழுது கொண்டு நின்றிருந்ததைக் கண்டு பேருந்துத் தொழிலாளி அவனை அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இது குறித்தும் மதுரை நகர்—பி-3 காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று—குற்ற எண் 3739/75—இ.பி.கோ. 363 பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டு இந்த வழக்கு புலனாய்வில் இருந்து வருகிறது.

அரசுக்குக் கிடைத்த தகவல்களின்படி நான்கு சம்பவங்களில் இரண்டுதான் கடத்தப்பட்ட சம்பவம். இரண்டு சம்பவங்களில் விருப்பம் போல் சென்று திரும்பியிருக்கிறார்கள். இந்த இரண்டு

சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் கூட போலீசார் தீவிரமாகப் புலனாய்வு செய்து விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்னும் யாரும் கைது செய்யப்படவில்லை என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். யாரை யாவது கைது செய்துவிட முடியாது. குறிப்பிட்டவர் யாரோ, உண்மையான குற்றவாளி யாரோ அவரைத்தான் கைது செய்ய வேண்டும். போலீசார் தீவிரமாக இன்று தங்களுடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. இந்தப் பையன்கள் வந்து சொன்னது உண்மை தானா, அப்படிப்பட்ட குற்றவாளிகள் உலவுகிறார்களா என்பதை யெல்லாம் போலீஸ் துறையினர் விசாரிக்க வேண்டுமென்று, தீவிரமாக அதில் ஈடுபடவேண்டும் என்று அரசாங்கம் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு மேல் இதைப்பற்றி அவையை **ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(ஆ) பொள்ளாச்சி சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிட்டெட்டில் கதவடைப்பும், நிகழவிருக்கும் ஆட்குறைப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, **திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து, சோ. அழகர்சாமி ஆகியோர் "**

"the serious situation arising out of lock-out in Sakthi Textiles Ltd., Pollachi and threatened retrenchment of 215 workers from 17th November 1975 and failure of the Government to prevent the same as done in neighbouring States" **என்கிற** ஒரு பொருள்பற்றி சட்டமன்ற விதி 42-ன் கீழ் அவசர பொது